



தங்க நகரம்!
ரூ.2.50
லயன்
காமிக்ஸ்


தங்க நகரம்!
குஸி நாட்டைச் சேர்ந்த மாவீரன் ஸாம்ஸனும் அவனது மனைவி ஜூலியாவும் தொலை
தூரப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.


அந்க பட்டுப்போன மரத்தின் அருகில் சென்று நமதுபடகை கட்டுவோம்! இல்லையென்ருல் நீர்வீழ்ச்சியின் வேகத்தில் படகு எங்காவது சென்று விடும்!
இப்பொழுது நாம் போய், கிழவன் மட்டபார் சொன்னது உண்மை தாஞ என்று ஒருபார்வை பார்த்து விட்டு வருவோம்!


மட்டபார் சொன்ன தடயத்தை
வைத்து பார்க்கும்போது நாம் அரு-
வியை நெருங்கிவிட்டோம் என்று
நினைக்கிறேன்-


இதோ! நீர் வீழ்ச்சியினை ஒட்டிய அந்தப்பாறைகள் வழியாக ஏறுவோம்!
ஜாக்கிரதை, பாறை வழுக்கலாக இருக்கிறது. இங்கிருந்து வழுக்கிவிழுந்தால் அருவியின் மத்தியில் தான் போய் விழுவாய்.


அப்பாடா, நாம் மேலே வந்துவிட்டோம் ஜூலியா! இந்த அருவிக்குப் பின்னால்தான் அதிசயமான தங்க நகரம் இருக்க வேண்டும். மறு-கரைக்குப்போக நாம் பாதை கண்டுபிடிக்க வேண்டும். என் பின்னால் வா-


இந்தப்பாதை தானே ஸாம்ஸன்?
ஆமாம், மட்டபார் குறிப்பிட்ட பாதை இதுதான்.
மட்டபார் சாவதற்கு முன் சொன்னது உண்மையென்றால் நாம் அதிசயம் மிக்க தங்க நகரத்திற்குள் நுழைந்து விடுவோம் அல்லவா?
கண்டிப்பாக, ஜூலியா கண்டிப்பாக!


இதோ வந்து விட்டோம்!


என்றால் என் கண்களையே நம்ப முடியவில்லை! சூரிய ஒளியில் கோபுரங்கள் அனைத்தும் ஜொலிக்கின்றன! அத்தனையும் தங்கம்!


குறுகலான இந்தப் படிக்கட்டுகள் வழியாக கீழே இறங்கலாம்!
பட்டபார் நம்மிடம் சொன்னது உண்மைதான் என்றாகி விட்டது!


சமவெளிக்கு அவர்களை இட்டு வந்தது.
நாம் தங்க நகரத்திற்கு வெகு தொலைவில் இருக்கிறோம் · விரைவாக சென்று அடைய வேறு பாதை எதுவும் இல்லையா ஸாம்ஸன்?



இது என்ன விந்தை ஸாம்ஸன், நாம் மேலிருந்து கீழே இறங்கியவுடன், அந்த தங்க நகரத்தை பார்க்க முடியவில்லையே,
நீ சொல்வது சரிதான் - இந்த சமவெளி அந்த நகரத்தை மறைத்து விட்டது, அதுவுமின்றி நகரத்திற்கு செல்ல பாதை எதுவு-மில்லை!
அருகில் ஏதாவது மரம் இருந்தால் அதில் ஏறி ஏதாவது பாதை தென்படுகிறதா என்று பார்க்கலாம்!
ஆமாம், நீ சொல்வது சரிதான் கனலா. அதோ அங்கே பார்!
இந்த மரம் நமக்கு பயன் படும்! நீ இங்கேயே கீழே நில்-


கிழட்டு சூனியக்காரியின் வதங்கிய விரல்களைப்
போன்ற கிளைகளைப் பிடித்து ஸாம்ஸன் ஏறினார்.


ஜூலியா எல்லாமே மறைந்து விட்டது- தொடுவானம் வரை ஒரே சமவெளியாகத் தான் இருக்கிறது-
அப்படி இருக்க முடியாதே! மலையுச்சியில் நின்றபோது சூரிய ஒளியில் அந்த தங்க கோபுரங்கள் மின்னுவதைப் பார்த்தோமே-
நீயே வந்து பார்! என்ன மாயம் இது?


வந்து பார்-
நம்பவே
முடியவில்லை!


இப்பொழுதாவது நம்புகிருயா?
இது சாத்தியமே இல்லை- ஸாம்ஸன், நாம் சிலமணி நேரத்திற்கு முன்புதான் அந்த நகரத்தைப் பார்த்தோம்!



வெறும் கனவுதானே? அப்படி நகரம் உண்மையில் இல்லையோ?
இல்லை! நகரம் அங்குதான் இருக்கிறது- மட்டபார் சொல்லிய மற்ற தகவல்கள் அனைத்தும் சரி-யாக பொருந்தி உள்ளன! அந்த நகரத்தை சுற்றி ஏதோ மர்மம் இருக்கிறது-ஏன் நம் கண்களுக்கு இப்பொழுது தெரியவில்லை என்பதை கண்டுபிடிக்க வேண்டும்!
அந்த நகரம் உண்மையில் இருந்து, நம் கண்களுக்கு மட்டும் தெரியவில்லை என்று எப்படி உறுதியாக கூறுகிறீர்கள்?
உன்னுடைய கேள்விக்கு என்னால் இப்பொழுது பதில் சொல்ல முடியாது ஜூலியா, ஆனால் இந்த புதிர்க்கான விடையை நான் கண்டுபிடிக்காமல் விடப்போவதில்லை


மறுபடியும் அந்த மலை-
யுச்சிக்குப்போய் தங்க
நகரம் இருக்கிறதா
என்று ஊர்ஜிதப்படுத்
திக் கொள்வோம்-வா!


ஸாம்ஸன்! இப்பொழுது சொல்லுங்கள்! உங்க ளுடைய திட்டம் என்ன?
பொறு! என்னுடைய திட்டத்தை நீயே புரிந்து கொள்வாய்-


அதோ பார்-


தங்க நகரம் தெரிகிறது!
மலையுச்சியில் இருந்து மட்டும் தெரிகிறது-ஆனால்-கீழே இறங்கி விட்டால் நகரம் மறைந்து விடுகிறது!
சரி என்ன செய்வது இப்போது?


பேசாமல் எங்கள்
கேள்விகளுக்குப்
பதில் சொல்லலாம்!


அந்நியர்களே, நீங்கள் எங்கிருந்து வருகி றீர்கள்?
ரூஸி நாட்டிலிருந்து வருகிறோம், என் பெயர் ஸாம்ஸன். இவள் ஜூலியா!




வாயை மூடு-எந்த வழியாக வந்தீர்கள்? இந்த மலைச்சுவர்தான் உலகத்தின் எல்லைப் பகுதியாச்சே!
நாங்கள் ருஸியிலிருந்து வந்தோம் என்று ஏற்கனவே உங்களிடம் சொல்லி விட்டோம்! எங்களுடைய நாடு இந்த மலை உச்சிக்குப் பின்னால் இருக்கிறது!
இருக்க முடியாது' ஜீஸ்க் என்றஇந்த இடத்துடன் உலகம் முடிவு பெறு-கிறது! எங்களை பின் தொடர்ந்து வாருங்கள்-


மறுகணம் மாய வளையங்கள் அவர்களை சிறைபிடித்தன.
அசையாதீர்கள்! நீங்கள் எங்களுடைய கைதிகள்! உங்களை எங்கள் தலைவரிடம் அழைத்துச் செல்கிறோம்-



நகரத்திற்குள் செல்வதற்கு எப்படியோ நமக்கு ஒரு வழி கிடைத்திருக்கிறது-
ஆமாம்-ஆனால் நாம் இங்கு என்ன கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டியதிருக்கிறதோ?


இப்போதைக்கு நமக்கு வேறு வழி இல்லை!
அமைதியாக இரு ஜூலியா நடப்பது நடக்கட்டும்!


நாம் இப்பொழுது எங்கு போகிறோம்?
வாயை மூடு வரவேண்டிய இடத்திற்கு வந்து விட்டோம்!
உங்களுடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் கிடைக்கப்போகிறது. எங்கள் தலைவர் கலார் உங்களுக்குப் பதில் சொல்லுவார்!
உள்ளே செல்லுங்கள்!



கலார் அரசே! இவர்கள் கைதிகள். இவர்களை மலை உச்சிக்கு அருகில் கண்டு பிடித்தோம்-


விருந்தினர்களே, எங்கிருந்து வருகிறீர்கள்? பேசுங்கள்.
இவள் என் மனைவி ஜூலியா! என் பெயர் ஸாம்ஸன்! நாங்கள் தொலை தூர நாட்டிலிருந்து வருகிறோம்!
இருக்க முடியாதே. ஜீஸ்க் என்ற இடத்துடன் உலகம் முடிவடைகிறது.
இல்லை, நாங்கள் மலை உச்சியின் மறு கரையில் இருந்து வருகிறோம். மலை உச்சியில் இருந்து நாங்கள் தங்க நகரத்தை பார்த்தோம் ஆனால் கீழே இறங்கிப் பார்த்தால் அந்த தங்கநகரம் காணாமல் போய் விட்டது.


நீங்கள் சொல்வது எல்லாம் நடைமுறையில் சாத்திய மில்லாதவை! ஆனால் நீங்கள் உண்மை பேசுகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்-
ஏனென்றால் நீங்கள் மறுக்க முடியாத ஒரு உண்மையை பற்றி சொன்னீர்கள்-என்னை பின்தொடர்ந்து வாருங்கள்!


வாருங்கள், நான் உங்களுக்கு காண்பிக்கப் போவதை கண்டு நீங்கள் ஆச்சரியப் பட் போகிறீர்கள்!
இதுதான் டோம்பலாரா என்கிற தங்க நகரம்-ஆமாம். இந்த நகரம் இங்குதான் இருந்தது! ஆனல் இப்பொழுது ஏரியின் அடியில் மூழ்கிக் கிடக்கிறது-ஒரு நில நடுக்கத்திற்குப் பிறகு டோம்பலாரா நகரம் நீரால் சூழப்பட்டுவிட்டது இங்கு இருக்கும் நாங்கள்தான் அந்த நிலநடுக்கத்தில் தப்பி பிழைத்தவர்கள்-
மலையுச்சியிலிருந்து பார்க்கும் போது நீரடியிலிருக்கும் தங்க நகரத்தின் பிரதிபலிப்பு தெரியும்!



நாங்கள் இங்கு எப்படி வந்தோம்
என்பது உங்களுக்கு
புதிராக இருக்கலாம்!
நாங்கள் எங்கிருந்து வந்தோம்,
நாங்கள் யார் என்பதை
உங்களுக்கு விளக்கமாக
சொல்லி வருகிறோம்


நாங்கள் ரூஸி நாட்டைச் சேர்ந்தவர்கள்! இந்த நகரத்தைப் பார்த்த மட்டபார் என்று ஒரு கிழவர் எங்களுக்கு இந்த நகரத்தைப் பற்றி சொன்னார்-ஆகவே ஜூலியாவும் நானும் அவர் சொன்னது உண்மைதானா என்று அறியவே இங்கு வந்தோம்.
இந்த நகரத்திற்கு எப்படி செல்வது என்றும் அக் கிழவர் குறிப்பிட்டார், புகை மூட்டம்போல் கா-ணப்படும் ஒரு ஜலசந் தியை கடந்தபின் அங்-குள்ள அருவிக்கு அடியில் உள்ள குறுகலான பகுதி வழியாக சென்றால் மலை உச்சியை அடையாளம் என்று சொன்னார் அங்கேதான் நீங்கள் எங்களை கண்டுபிடித் தீர்கள்-


நாங்கள் இங்கு வந்ததில் எவ்வித தவருன நோக்கமும் கிடையாது. மட்டபார் சொன்னது உண்மையா, பொய்யா என்று அறியவே வந்தோம்.


நான் உங்களை நம்புகிறேன், நண்பர்களே - பூரணமாக நம்புகிறேன்!


ஏன் இந்த உலோக கவசத்தை அணிந் திருக்கிறீர்கள்?
நில நடுக்கம் ஏற்பட்ட பொழுது, நாங்கள் புரியாத ஏதோ ஒரு காந்த சக்தியினால் தாக்கப்பட்டோம்- ஆகவே எங்கள் உடல் முழுவதும் புண்கள் வந்துவிட்டது, அதை மறைக்கவே நாங்கள் இதை அணிந் திருக்கிறோம்- எங்களுடைய இந்த கஷ்டத்திலும் நீங்கள் வந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக் கிறது
எப்படி நில நடுக்கம் ஏற்பட்டது? இதை நிவர்த்தி செய்ய வேறு வழியே இல்லையா?
எல்லாம் எங்கள் கஷ்ட காலம் எங்கள் மக்களில் சிலர் இன்னமும் நீரினடியில் இருக்கிறார்கள் என்று நினைக்கிறோம். அதைத் தெரிந்து கொள்ளக் கூட முடியாத நிலையில் இருக்கிறோம்!


என்ன சொல்கிறீர்கள்? தண்ணீருக்குள் எப்படி உயிர் வாழ முடியும்? சாத்தியமில்லாதது!
நீசொல்வதும் சரிதான், ஜூலியா ஆனால் இரவு நேரங்களில் மனிதர்கள் சில இதில் நீந்துவந்தயும் பின்பு மறைந்து போவதையும் நாங்கள் பார்த் திருக்கிறோம்-


என்னுடன் வாருங்கள்! நாங்கள் உயிர் கிணறு என்று அழைக்கும் ஒரு கிணற்றை உங்களுக்கு காண்பிக்கிறேன்-
உயிர் கிணறு? ஏன் இப்படி பெயர் வந்தது?
ஹூம்- கிணறடியில் இன்னமும் சிலர் உயிரோடிருக்கிறார்கள்- அதனால் தான்!



கிணற்றினுள் இறங்கி அவர்களை மீட்பதுதானே?
இல்லை சாம்சன்- இங்குவாழும் விநோத ஜந்து எங்களை உள்ளே சென்று ஆராய அனுமதிப்பதில்லை!
இந்த மர்மத்திற்கு காவல் ஒரு விநோத ஜந்துவா? எங்கே அது கலார்?
தொப்!
அதோ!



மறுகணம் ஒரு இராட்சஸக் கரம் ஒன்று ஆங்காரமாய் வெளிப்பட்டது.
நீரினுள்ளே மனிதர்கள் உயிர் வாழ்கிருர்களா என்பதைகண்டு அறிய தடையாக உள்ளது இந்த விநோத ஜந்து தானு?
இல்லே! இதுமட்டும் காரணம் இல்லே- எங்களால் நீரினுள் குதிக்க முடியாது, திரவங்கள் எங்கள் உடம்பின் மீது படுவதை எங்களால் சகித்துக் துக் கொள்ள முடியாது!


அந்த கத்தியை என்னிடம் கொடுங்கள்!




ராட்சஸக் கரங்கள் ஸாம்சனை
சுற்றி வளைத்தன.


ஜீவ மரணப் போராட்டம் அது!


அந்த விநோத ஜந்து சாகவேண்டும் என்ருல் அதன் வயிற்றுப் பகுதியில் குத்திஞல் தான் சரிப்படும் என்பதை ஸாம்ஸன் அறிந்து வைத்திருந்தார்-

கலாரும், அவருடைய ஆட்களும் சண்டையை பார்த்துக் கொண்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் நீரில் இறங்கி சண்டை இடவில்லை-.




ஸாம்ஸன் கத்தியை
அதன் நுரையீரலில் சொருகினர்.
உடனே அது தன் கடைசி முயற்சி
யை மேற்கொண்டது-
பிடியைத் தளர விடாமல்
ஸாம்சனை நசுக்க முயற்
சித்தது.
ஆனல் ஸாம்சன் தொடர்ந்து
கத்தியால் குத்தினர்.



ஸாம்ஸன்! அவரை காப்பாற்றுங்கள்!


ஸாம்சன்! ஸாம்சன்! இங்கே பாருங்கள்! புதிய சில ஜந்துக்கள் வந்துள்ளன!
தைரியமாக இரு ஜூலியா, இன்னும் ஒரு சில வினாடிகளில் அவர் தன் நிலைக்கு வந்துவிடுவார்-



இனியும் அந்த சனியன் உங்களைத் தொல்லைப் படுத்தாது!
நானும், நீரினுள் குதித்து வந்திருந்தால் உதவியாகஇருந்திருக்கும் இல்லையா, ஸாம்ஸன்?
இந்த கிணற்றில் என்ன மர்மம் இருக்கிறது என்று அறிய செல்லட்டுமா, கவார்? உங்கள் அனுமதி உண்டா?


எனக்கு எதுவுமே தோன்றவில்லை ஸாம்சன்!
கலார்! இங்கே ஒரு மாய வலை பின்னப் பட்டிருப்பது புரிகிறது! எல்லாவற்றிற்கும் மூல காரணம் மூழ்கிப் போயிருக்கும் தங்க நகரம் தான் என்று நினைக்கிறேன்!
என்ன சொல்கிறாய் நீ?
இங்கே ஒரு அந்நிய சக்தியின் ஆக்ரமிப்பு உள்ளது! அதன நோக்கம் தங்க நகரத்தை சூறையாடுவதுதான்! அதைப்பற்றி அறிய வேண்டுமானால் மீண்டும் கிணற்றினுள் புக வேண்டும்!
ஸாம்சன்! எங்கிருந்தோ வந்த நீ இந்த ஆபத்திலெல்லாம் ஏன் தலையிடுகிறாய்?
அக்கிரமம் நடப்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது கலார்! அதுதான் காரணம்!


வெற்றியோடு விரைவில் திரும்பி வருகிறேன் கலார்!



விவேகமாக நடந்து கொள்! நீ பெரிய வீரன் தான் என்ருலும் நேரத் திற்கு தகுந்தாற்போல் திறமையோடு செயல்படு!
பயப்பட வேண்டாம் கலார்! நான் கண்டிப் பாக திரும்பி வருவேன். ஜூலியாவை பார்த்துக் கொள்ளுங்கள்!


இந்த கிணற்றிற்குள் ஒரு கதவு இருக்கும் என்று எனக்கு உறுதியாகத் தெரியும்!


கிணற்றினுள் இருந்த
அந்த மரக்கதவை ஸாம்ஸன்
அசுர பலத்துடன் பிடித்து
இழுத்தார்.-


இன்னும் சில வினாடிகளில்
எனக்கு மூச்சுத் திணறல்
வந்துவிடும்!



'பட்'டென்று கதவு வழி விட்டது.
இந்த குகை வழியாக தண்ணீர் வெளியே செல்கிறதா? அதையும் பார்த்து விடுவோம்'


தண்ணீர் பாதாள அறைக்குச் செல்கிறதே! கலார் இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?


இது என்ன விந்தை? தண்ணீர் திடீரென்று காணாமல் போய்விட்டதே! இப்பொழுது நான் ஏரிக்கு அடியில் இருக்கிறேன் என்று நினைக் கிறேன்-இந்த குகை வழியாக சென்றால் கடலடி நகரத்திற்கு சென்றுவிடலாம் என்று நினைக்கிறேன்!


தங்க நகரத்தைப் பற்றி உண்மையை நான் கண்டுபிடிக்கப் போகிறேன்-


மறுகணம்-
யாரப்பா நீ? ஏரியின் மேலேயுள்ள நாட்டவனா?
இல்லை! நான் ருஸி நாட்டைச் சார்ந்தவன்-நீயார்? நீ இங்கு என்ன செய்கிறாய்?


என்னையாரும் இதுவரைகேள்வி கேட்டதே இல்லை- நான் உன் தைரியத்தை பாராட்டுகிறேன்-என் பெயர் டியபார்- என்னுடைய பெயரைக் கேட்டாலே எல்லோரும் நடுங்குவார்கள். உலகையே என் காலடிக்குக் கொண்டு வர வேண்டும். என்பது தான் என்னுடைய இலட்சியம்!
நான் உன் பெயரை இதுவரை கேள்விப் பட்டதேயில்லையே!
என்னை பின்தொடர்ந்து வா, ஸாம்ஸன்! உனக்கு எல்லாவற்றையும் புரிய வைக்கிறேன்!


நான் ஒரு மந்திரவாதி. இந்த மிருகங்களை எல்லாம் நான் ஆட்டிப்படைக்கிறேன்-டோம்பலாராவில் உள்ள பொக்கிஷங்களை அபகரிக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை-நான் இயற்கை சக்திகளையும் ஆட்டுவிக்கிறேன்- அதில் வெற்றியும் பெற்று இருக்கிறேன் நில நடுக்கத்தை ஏற்படுத்தியது நான்தான்!
இவைகள் எல்லாமே என் கட்டுப்பாட்டில் உள்ளன! அது சரி ஆக்டோபஸ்ஸைக் கொன்றது யார்- நீ தானு?
நான்! நான்!
அப்படியானால் நீ எனக்கு எதிராக போரிட வந்துள்ளாயோ?
அப்படித் தான்!


நாம் பிறகு விவாதம் செய்வோம்! முதலில் சிறிது நேரம் இளைப்பாறுவோம்! என்னுடைய பொக்கிஷங்களில் அருமையான ஒரு பொக்கிஷத்தை இப்பொழுது கொண்டு வருவான்-
நாம் சிறிது நேரம் நம் கடமையை மறந்து சந்தோஷத்தில் ஈடுபடுவோம், ஸாம்ஸன்!
?
இதுதான் என்னுடைய அரிய பொக்கிஷம்- இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் ஸாம்ஸன்?
இவள் பெய் சாறு. இவள் டோம்பலாராவைச் சார்ந்தவள்- மிகவும் அழகானவள்- வருங்காலத்தில் என் மனைவியாகப் போகிறவள்-


சாஹ, நடனம் ஆடு!


நான் உன்னை நடன ஆடும்படி கட்டளை இடுகிறேன்-


நிறுத்து!
ஆ ஆ!



இவனை பிடியுங்கள்!
என்னை வஞ்சிக்கப்பார்க்கி
றான்-மற்ற கைதிகளுடன்
இவனை அடையுங்கள்--
டியபார் யார் என்பதை
இவன் உணரட்டும்.
அவனைத்தடுன்! சீக்கிர
யுங்கள்!
கும்!
முன்னேறுங்
கள்!



பிரபுவே· இதோ உங்களிடம் ஒப்படைக்கிறோம்?
நீநீ-ரொம்ப அவசரப்பட்டு விட்டாய் ஸாம்ஸன்? என்னை எதிர்க்க நினைக்கிறவர்களை கண்டால் எனக்கு பிடிக்காது இங்கு குழப்பத்தை ஏற்படுத்தியதற்காக உனக்கு தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது- இவனை இழுத்துச் செல்லுங்கள்!
அந்நியனே உன் சாவு நெருங்கி விட்டது! உன் எமன் காத்திருக்கிறான் அங்கே!


தைரியமாக களத்தில் இறங்கு! இதுதான் உன் வாழ்க்கையின் கடைசி அத்தியாயம். இனி மேல் நீ உலகத்தை பார்க்க முடியாது- ஏனென்றால் நீ சண்டை போடப்போவது காண்டா மிருகத்துடன்-போ!



சண்டை ஆரம்பிக்கட்டும்- காண்டா மிருகத்தை விடுதலை செய்யுங்கள்!


ஹேய்?
விளையாட்
டைப் பார்!
டம்!டம்!டம்!


அசுர பலத்துடன் பாய்ந்தது காண்டாமிருகம்! அதன் இரட்டைக் கொம்புகள் ஸாம்சனைப் பதம் பார்க்கத்துடித்துக் கொண்டிருந்தன?
கர்ர்ர்ர்!


வெறியுடன் பாய்ந்து வந்த அந்த கொடிய மிருகத்திடம் இருந்து ஸாம்ஸன் மெல்ல நழுவி சென்றார்-



அயராமல் விரட்டியது அந்தப் பிசாசு!


ஸாம்சனின் அசாத்தியத்திறமை மட்டுமே அவர் உயிர் காத்தது!


ஏய் ஸாம்ஸன்! இனிமேல் நீ தப்ப முடியாது! உன் கதை இத்துடன் முடிந்தது!


திடீரெனப் பாய்ந்தார் ஸாம்சன்!
இந்த ஈட்டியை என்னிடம் கொடு உன்னிடம் இருப் பதைக்காட்டிலும் அது எனக்கு மிகவும் பிரயோ சனமாக இருக்கும்!


கிட்டே... வா!


இம்முறை ஸாம்சன்
விலகி ஓடவில்லை!
உறுதியாக நின்றார்.
ஆஹல்
தடக்! தடக்!


சரியாகக் குறிபார்த்து, ஸாம்ஸன்
ஈட்டியை அதனை நோக்கி
வீசினார்.


ஒரு ராட்சஸ முனகலுடன் அந்தக் காண்டாமிருகம் மண்ணைக் கவ்வியது.
க்ராஷ்!


நடக்கக் கூடாதது நடந்துவிட்டது! அவனை பிடியுங்கள்!
குட்பை. டியபார்-


ஸாம்ஸன் என்னை காப்பாற்றுங்கள்!
டியபார் ஒரு அரக்கன்- அவன் என் மக்களை தன் அடிமைகளாக ஆக்கி விட்டான்.
இந்த எலிப்பொந்தில் இருந்து நாம் எப்படி தப்பி செல்வது?


இங்கே என்ன நடக்கிறது என்பதை விளக்கமாகச் சொல்லேன்?
டியபார் ஒரு கொடியவன்! தன் மாந்த்ரீக சக்தியைப் பயன்படுத்தி ஒரு ராட்சஸ நில நடுக்கத்தை ஏற்படுத்தினன்! அதனல் ஏற்பட்ட வெள்ளத்தில் எங்களது தங்க நகரமே ஏரியினுள் மூழ்கிவிட்டது! வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட எங்கள் மக்கள் சிலரை இப்பொழுது இங்கே அடிமைகளாக நடத்தி வருகிறுன் டியபார்!


பாருங்கள்! அந்தமனிதர்கள் நீந்திச் சென்று கோபுரங்களில் உள்ள தங் கங்களை எடுத்து வருகிறார்கள்! அவர்கள் இங்கு நீண்ட நாட்கள் உயிருடன் இருக்கமுடியாது! ஒவ்வொருவராக செத்துக்கொண்டே இருக்கிறார்கள்-இதை தடுக்கஎன்ன வழி சாம்ஸன்!
முதலில் ஏரியின் மேல்மட்டத்திற்கு சென்று கலாரிடம் விபரத்தைச் சொல்வோம்! பின்னர் அதிரடித் தாக்குதல் நடத்துவோம்!


இந்தக் கொடுமை-
யைப் பார்!


போங்கள்!


ணங்


சீக்கிரம், சாரு! நம் எதிரிகள் சுதாரித்துக் கொண்டு தாக்க வருவதற்குள் நாம் தப்பிச் செல்ல சிறிது அவகாசமே இருக்கிறது.
ரெடி!


கும்
தொலைந்து போ! தொலைந்து போ!






இன்னும் ஒரு சில நொடிகளில், நீர் மட்டத்திற்கு சென்று விடலாம்!


ஸாம்ஸன் திரும்பி வந்துவிட்டார்!
சொல், ஸாம்ஸன்! நீ சொல்வதை கேட்க நாங்கள் பேராவலாய் இருக்கிறோம்! சாறா நீ உயிருடன் திரும்பி வந்து விட்டாயா?
கலார்,


கலார்! நான் நினைத்தது போலவே தான்! டியபார் எனும் கொடியவன் நீரினடியில் இருக்கிறான்!
என்ன செய்யலாம் ஸாம்ஸன்? நாங்கள் தான் தண்ணீரினுள் இறங்க முடியாதே!


கலார்,
நாம் இந்த வழியா
கச் சென்று அவர்
கள் எதிர்பாராத
நேரத்தில் அவர்-
களை தாக்கு
வோம்!
அவர்கள் நம்மை எதிர்
பார்க்காத இடத்தில்
இருந்து
அதிரடியாக அவர்
களை தாக்குவோம்-
இந்த எதிர்பாராத தாக்
குதலினல் வெற்றி திட்
டமாக நமக்குத்தான் !
வாருங்கள் போவோம்!


"முன்னேறுங்கள்!
விடாதீர்கள்!
கமான்!


உக்கிரமான போராட்டம் தொடர்ந்தது.
ஸாம்சனை என்னிடம் இழுத்து வாருங்கள்! அவன் எனக்கு வேண்டும்!


கலார், நான் சென்று உங்கள் சகோதரர்களை விடுதலை செய் கிறேன்-நான் வரும்வரை காத்திருங்கள்!
விடுதலை! விடுதலை!
வாருங்கள்! இனி தடை ஏதும் கிடையாது!
ஆனால் நீங்கள் யார்?


சகோதரர்களே! நான்தான் கலார்!
ஆமாம்-நான் இந்த ஹெல்மட் அணிந்-
திருப்பதால் உங்களால் என்னை அடை
யாளம் கண்டுகொள்ள முடியாது என்பது
எனக்குத் தெரியும்-ஆனால் எனக்கு உங்-
கள் அனைவரையும் தெரியும் -நீ,
எஸ்கார் நீ, லாரிக் மிருகங்களை விட
கேவலமாக நடத்தப்பட்டீர்கள் என்பது
எனக்குத் தெரியும்! தன்னுடைய உயிரை
யும் பொருட்படுத்தாமல் உங்களை காப்-
பாற்ற இங்கு வந்துள்ளவர் இந்த ஸாம்சன்
அவர் ரூஸி நாட்டைச் சார்ந்தவர்!


வாழ்க ஸாம்சன்! டியாபாரை ஒழிப்போம்!


டோம்பலாரா மக்களே, வெற்றி நமதே!


டியபார்! நீ என்னிடமிருந்து தப்ப முடியாது!






ல-4


அடேய், முட்டாள், ஸாம்ஸன்! நீ சாகப் போவது உறுதி!


டியபாரை அழிக்க முடியாது!
டமீ!
ஆஆஆஆ!
செத்து ஒழி!


டியபார் இறந்து விட்டான்! இந்த மனிதர்கள் அனைவரும் அவன் ஆதிக்கத்தின் கீழ் இருந்தவர்கள். இப்பொழுது செயலிழந்து நிற்கிறார்கள். கலார், நாம் நீர்மட்டத்திற்கு மேலே செல்வோம்.


ஸாம்ஸன், டோம்பலாரா வின் ஞாபகச் சின்னமாக தங்கப் பாளத்தை வாங்கிக் கொள்ளுங்கள்! உங்கள் பெயர் டோம்பலாரா வர லாற்றில் அழியாத இடத் தை பெற்றுவிட்டது! நாங்கள் உங்களை ஒருபோதும் மறக்க வேண்டாம்-
குட்பை நண்பர்களே!
குட்பை, தங்க நகரமே!!
ஜூலியா! நாம் புதிய ஒரு நாட்டை கண்டுபிடித்த பெருமையுடன் ரூஸி நாட்டிற்கு திரும்பிச் செல்வோம்!
முற்றும்.

## வாசகர் கடிதம்!



- **R. காமேஷ்ராஜ், பழனிசெட்டிபட்டி.**

தீபாவளி லயன் காமிக்ஸில் முதல் கதையான 'அதிரடிக் கணவாய்' டக்கர்! டெக்ஸ் வில்லர் தூள் கிளப்பி விட்டார். இரண்டாவது கதையான 'ஸஃபாரி ஸாகஸம்' கதை சூப்பர். ஹீரோ பேய்கள் தூள் கிளப்பி விட்டன.

- **K. N. தியாகராஜன், சென்னை 33**

தித்திக்கும் தீபாவளி விருந்தாய் இப்படியொரு துடிப்பான 'ஹைட்ரஜன் பாம்' ஹீரோவாய் சைமனை எங்களிடம் அனுப்பி வைப்பீர்கள் என நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தொடர்ந்து சைமன் லயனில் பிரகாசிக்க வேண்டும் என்பதே என அவா!

- **பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.**


இதழுக்கு இதழ் 'லயன் காமிக்ஸ்'ன் மெருகு கூடிக் கொண்டே போகிறது. தீபாவளி ஸ்பெஷலில் டெக்ஸ் வில்லர் இனிப்பும், சைமன் காரமும் சேர்ந்து வழங்கினார்கள் (தங்கள் சாகஸத்தால்) வாசகர் கடிதம் இல்லாதது ஒரு சின்ன திருஷ்டிப் பொட்டு.

- **ஜெ ஜெயா, விளாத்திகுளம்.**

லயனின் தீபாவளி மலர் மிக அருமை. ஒவ்வொரு கதையும் கரும்பின் 'அடி' போல் இனித்தது. டெக்ஸ் வில்லரின் சாகஸம் Wonderful தீபாவளி மலரில் என அபிமான ஆர்ச்சி இடம் பெறாதது வருத்தமாக இருந்தது.


- **S. சுரேஷ் ஜான், S. ரமேஷ் குமார், உளுந்தூர் பேட்டை.**

மன வலிமையே மனிதன் வாழ்க்கைக்கு உரிய டானிக் என்பதை சைமன் அறிய வைத்து விட்டார். அப்பாடா! அடுத்து யாரோ தான் சாகஸம் செய்யப் போகிறார்கள் என்று நினைத்திருந்தேன். 'இரட்டை வேட்டையர்களா?' Welcome To You. எதிர்பாராத முடிவுடன் முடிந்தது 'ஆபத்தைத் தேடி' கதை. பழைய லயன், திகில் கிடைக்க நீங்கள் கையாண்டுள்ள 'புதிய பாணி ( எல்லா வாசகர்கள் மனதிலும் 'கிளிக்' ஆகி விடும்.


நம்பர்-1 சமூக விரோதி!
1930-ம் ஆண்டை ஒட்டியகாலத்தில் அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் ஏதாவது ஒரு கொலை அல்லது பாங்க் கொள்ளை சம்பந்தமாக போலீஸாரால் தீவிரமாக தேடப்பட்டு வந்த பயங்கர கேடி டில்லிங்கர் தந்திரத்தில் நரியையும் மிஞ்சிய அயோக்கியன்-நெடுங்காலமாக போலீஸாரின் கையில் அகப்படாமலேயே டபாய்த்துக்கொண்டிருந்தான்-
கொலை, கொள்ளை எதுவானாலும் எல்லா அம்சங்களையும் முன்கூட்டியே கச்சிதமாக நிர்ணயித்துக் கொண்டுதான் செயலில் இறங்குவான். அவன் தன் கும்பலோடு பதுங்கி வாழ்ந்த இடம், ஒரு படுமோசமான பகுதியில் யாருக்கும் சந்தேகம் வராத இடத்தில் இருந்தது. தான் ஒரு இங்கானையராபின்ஹூட் என்று பயலுக்கு உள்ளுக்குள்ளே நினைப்பு!
எங்க அப்பாரு யோக்கியமானவராத்தான் இருந்தார். கஷ்டப்பட்டு, ஒழைச்சி சம்பாதிச்சு பணத்தை பாங்க்கிலே சேமிச்சு வச்சார். பாழாப் போற அந்தப் பேங்க் திடீர்னு திவாலாகிப் போச்சு. எல்லோரோட பணமும் கோவிந்தா! எங்கப்பாரு ஓட்டாண்டி ஆயிட்டாரு!
அதனாலதான் நான் சொல்றேன்- இந்த பாங்கர்களெல்லோருமே மோசடி பேர்வழிங்க! அவங்க அநியாயமா அப்பாவிகள் வயித்திலே அடிச்சு சேர்த்த சொத்தைப்பிடுங்கி ஏழைகளுக்கு கொடுக்கறது தப்பே இல்லைன்னு!




ஆனுல் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளாத நீதித் துறை அந்தசமூக விரோ தியை தொடர்ந்து வேட டையாடி வந்தது-
டாக்டர்-என்னோட கைரே கையை எப்படியாவது அசிங்கம் பிடிச்ச முஞ் சியையும் கொஞ்சம் மாத்தி வேறு யாரோ ஒருத்தன் மாதிரி என்னை ஆக்கிடணும்-எவ்ளோ கேட்கிறீங்க?
அஞ்சாயிரம் டாலர்கள் அட்வான்ஸா தந்திடணும்!
அடேய் கிழவா- அந்தப் பணத்தை அனுபவிக்க நீ உயிரோட இருக்கணும்கிற ஆசை இல்லியா? இப்போ சொல்லு. அட்வான்ஸா தந்திடணுமா இல்லே'
தெரியாம சொல்லிட்டே-ம்ப்பா- நீ அப்புறமா உனக்கு வசதிப்பட்டப்-போ தந்தா போறும்!
ஆபரேஷனுக்குப் பிறகு டிலிங்கரின் முக அடையாளமும் கை விரல் ரேகைகளும் ஓரளவு மாறியிருந்தன.
டாக்டருக்கு உயிர் மீது ஆசை-யிருந்ததால பீஸை வற்புறுத்த-வில்லை!



1934ல் சிகாகோவில் ருமேனியாவிலிருந்து வந்து அமெரிக்காவில் தங்கிவிட்ட ஸேஜ் என்ற பெண் ஒழுக்கக் குறைவானகுற்றங்களுக்குபலமுறை கைது செய்யப்பட்டவள்.
உன்னை இனியும் இங்கே வைத்துக் கொண்டிருந்தால் நாட்டையே கெடுத்து குட்டிச்சுவராக்கி விடுவாய்-எனவே, விரைவிலேயே உன்னை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு தீர்ப்பளிக்கிறேன்!
அமெரிக்காவை விட்டு வெளியேற ஸேஜுக்கு கொஞ்சமும் சம்மதம் கிடையாது- இங்கே அவள் இஷ்டம்போல் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது-தன் பிரச்னையை தன் தோழி பாலியிடம் சொல்லி வேதனைப்பட்டாள்-
அங்கே ருமேனியாவில் எனக்கென்று எதுவுமே கிடையாது. என் அழகும், இளமையும் கை நழுவிப் போய்க் கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில் அங்கே போனால் சீக்கிரமே பட்டினியால் செத்துப் போயிடுவேன்.



பாலிக்கு ஒரு புது நண்பன் கிடைத்திருந்தான். தன் பெயர் ஜிம்மி லாரன்ஸ் என்று சொன்னான். நகருக்கு அவன் புதியவன். அவன் தங்குவதற்கு ஸேஜ் தன் வீட்டில் ஒரு அறையை ஒதுக்கித் தர வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள் பாலி.
ஓ- தாராளமாக! அவங்க என்னை நாட்டை விட்டு வெளியேறுகிறவரைக்கும் நீங்க இங்கே தூங்கலாம்!
மிக்க நன்றி மேடம்!
கடைந்தெடுத்த அயோக்கியன் ஒருவனுக்கு உதவி செய்கிறோம் என்று ஸேஜு"க்கு அப்போது தெரியாது. நாளிதழ்களில் அச்சிடப்பட்டிருந்த அவனுடைய நிஜ உருவப் படத்திலிருந்து அவனுடைய இப்போதைய தோற்றம் மாறுபட்டிருந்தது தான் கார்ணம், ஆனால் ஒரு நாள் இரவு
விழுந்து விழுந்து சிரிக்கிறீங்களே- பேப்பர்லே அப்படி என்னதான் எழுதியிருக்கு?
இந்தப் பத்திரிக்கை ரிப்போர்ட்டர்களுக்கு மறை கழண்டிடுச்சு போலிருக்கு. இதைப் பாத்தியா செயிண்ட் லூயிஸ்லே என்னை இன்னிக்கு யாரோ பார்த்தாங்களாம். எப்படியிருக்கு வேடிக்கை?


பின்னர் டிரிலிங்கரும், பாலியும் அங்கிருந்து அகன்றதும்
ஸெயின்ட் லூயிஸ்- ஸெயின்ட் லூயிஸ்- எங்கே அதைப் பத்தி எழுதியிருக்கு? ஓ மை காட்; என்ன இது?
'ஜான் டிலிங்கர்' நம்பர்-1 சமூக விரோதி
இன்று காலையில் ஸெலிஸ்ட் லூயிஸில் தென்பட்டானும்-
வாரக் கணக்கில் யோசித்து, யோசித்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தாள் ஸேஜ்-விஷயம் அம்பலமானால் தன் உயிருக்கே ஆபத்து வரலாம் என்று அவள் அறிவாள்-எனினும், தான் அமெரிககாவை விட்டு வெளியேற்றப்படுவதை எப்படியாவது தவிர்க்கத் துடித்த ஸேஜ் ஒருவழியாக துணிந்துவிட்டாள்!
இன்னும் ஒரு சில மணி நேரத்தில் நான் வெளியேறியாகணும் இல்லையா இன்ஸ்பெக்டர்! அதற்கு முன் நாம் ஒரு பேரம் பேசலாம் என்று நினைககிறேன்! டிலிங்கரை நான் உங்கள் வசம் ஒப்படைச்சா என்னை நாடு கடத்துவதை கைவிட்டு-விடுவீங்களா- சொல்லுங்க!
என்ன உளர்றே? நீ மட்டும் அவனை எங்ககிட்டே ஒப்படைச்சேன்னா அப்புறம் நீ எது விரும்பினாலும் நடக்கும்!


ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது! சில தினங்களுக்குப் பின்-
னர் பாலியுடனும், டிலிங்கருடனும் சினிமாவுக்கு புறப்பட்டாள்
ஸேஜ்
Clark Gable
MANHATTAN
MELODRAMA
NOW SHOWING
BIOGRAPH
CINEM


தியேட்டரில் ஸேஜின் கவனம் சினிமாவில் இல்லை, பல்வேறு
விதமான எண்ணவோட்டத்தில் மூழ்கிப் போயிருந்தாள்,
படம் முடிந்து அவர்கள் மூவரும் வெளியே வந்த போது-
ஜான் டிலிங்கர்- உன்னை நான்
கைது செய்கிறன்!


சபித்துக் கொண்டே தன் துப்பாக்கியை உருவி எடுத்த டிலிங்கர் பக்கத்து சந்தினுள் பாய்ந்து தப்பியோட முயன்ருன், ஆனுல் இம் முறை அவனுடைய பாச்சா பலிக்கப் போவதில்லே. போலீஸாரின் தோட்டாவுக்குப் பலியாஞன்.
அட்டூழியம் புரிந்து வந்த அந்த நம்பர்-1 சமூக விரோதி இப்படி யாக திடும்மென அழிந்து போஞன். ஆனுல் ஸேஜைப் பொறுத்தமட்டில் விதி வேறுவிதமாக சதிசெய்து சிரித்தது-டிலிங்கரின் நெருங்கிய சகா ஒருவன் தன் நண்பனே காட்டிக்கொடுத்த துரோகியை ஒழிப்பதே இனிதன் இலட்சியம் என்று கிளம்பி விட்டான்-
அந்த சுயநல பிசாசை ஒழித்துக்கட்டி என் நண்பனின் மரணத்திற்கு பழிதீர்ப்பேன்- இது சத்தியம்!
அந்த துஷ்டனின் பெயர் பேபி.:.பேஸ் நெல்சன்! புதிய நம்பர்-1 சமூக விரோதி!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன், முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626 123 போன்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி 626 123. வெளியீடு எண்:65

# விற்பனையாகிறது!



# புக் மார்க்கெட்

டியர் ரீடர்ஸ்,

உங்களிடம் இல்லாத பிரதிகள்/விற்பனைக்கு உள்ள பிரதிகள் பற்றிய விபரத்தை எழுதி அனுப்புங்கள். இந்தப் பகுதியில் அதைப் பிரசுரம் செய்கிறோம். இஷ்டப்படும் வாசகர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

1) உல்கப் போரில் ஆர்ச்சி (லயன் வெளியீடு எண்:16). ரூ. 2/-

2) இரும்பு மனிதன் (லயன் வெளியீடு எண்: 5) ரூ. 5/-

மேற்கண்ட இரு பிரதிகளும் விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

E. K. சிங்கார அரசு,
H-53, பெரியார் நகர்,
(Housing Unit)
ஈரோடு-638 001.

1) கத்தி முனையில் மாடஸ்டி (லயன் வெளியீடு எண்: 1) ரூ. 2/-

2) மாடஸ்டி IN இஸ்தான்புல் (லயன் வெளியீடு எண்: 2) ரூ. 2/-


3) எத்தனுக்கு எத்தன் (லயன் வெளியீடு எண்: 3) ரூ. 2/-


4) டாக்டர் டக்கர் (லயன் வெளியீடு எண்: 4) ரூ. 2/-

5) திகில் வெளியீடு எண்: 1, 2, 3, 6, 7, 9, 16, 17, & 19, 20

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

A. ராஜா,
7, சிதம்பர நகர்,
சாத்தூர் - 626 203.


தங்க நகரம்!
ரூ.2·50
லயன் காமிக்ஸ்


தங்க நகரம்!
ரூ.2.50
லயன்
காமிக்ஸ்